379

# மாணவர்களின் :: :: கடமைகள்.

379

BY

AN EXPERIENCED TEACHER.

PUBLISHED BY
M. R. NATARAJAN,
EAST CAR STREET, CHIDAMBARAM.

Price 0-3-6.

T
N46
68631

# மாணவர்களின் கடமைகள்

1. பிள்ளைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு தினசரி பள்ளிக்கூடம் போகவேண்டும். லீவு எடுத்துக் கொள்ளாமல் வீட்டில் தங்கக் கூடாது.

2. பாடங்களை நன்ருய் வாசித்துக்கொண்டு போய் உபாத்தியாயர் கேழ்க்கும் கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டும்.

3. பெற்ருேர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் தங்களுடைய நடத்தையினுல் அவர்களை சந்தோஷப் படுத்தவேண்டும்.

4. வாசிக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது உபாத்தியாயரையோ அல்லது படித்தவர்களையோ கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

5. படிக்கவேண்டிய காலத்தில் காலத்தை வீணுக்காமல் ஊக்கத்துடனும் சுறுசுறுப்புடனும் கல்விகற்கவேண்டும்.

6. அவசியமில்லாமலும் பெற்ருேர் உத்திரவு இல்லாமலும் வீட்டிற்கு வெளியில் அலேந்து திரியக்கூடாது.

7. தினந்தோறும் தவருமல் அழுக்குப் போகத் தேய்த்துக் குளிக்கவேண்டும். தினசரி அணிந்துகொள்ளும் துணியை துவைத்துக்

கட்டும் பழக்கத்தை கைவிடக் கூடாது. தினசரி காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்க வேண்டும்.

8. அதிகாலையில் எழுந்து படிக்கவேண்டும் பழைய பாடங்களைப் படிக்கவேண்டும். படித்து முடிந்தவுடன் படித்ததை சிந்திக்க வேண்டும்.

9. எந்தக் காரியத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்க ஆரம்பத்திலிருந்தே பழக்கம் செய்து வரவேண்டும்.

10. உபாத்தியாயர் கொடுக்கும் வீட்டுக் கணக்குகள் பாடங்கள் முதலியவைகளில் கவனம் செலுத்தி ஒழுங்காய்ச் செய்துகொண்டு போக வேண்டும்.

11. எண்சுவடி, பெருக்கல் வாய்ப்பாடு முதலியவைகளை ஒவ்வொரு நாளும் செம்மையாய் வாசிக்கவேண்டும். இதர விளையாட்டுக்களை போல் வாய்ப்பாட்டையும் ஒரு விளையாட்டாக வைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் கேள்விகள் கேட்டுக்கொண்டு விளையாடலாம்.

12. கூடுமானால், பள்ளிக்கூடம் விட்டுப் போகும் போதும் பள்ளிக்கூடத்திற்கு வரும்போதும் ஒருவருக்கொருவர் பாடத்தில் கேள்விகள் கேட்டுக்கொண்டு போகவேண்டும்.

13. எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும். தாழ்மையாகவும் அடக்கமாயும் நடந்து கொள்ளவேண்டும்.

14. தாயார் போடுகிற ஆகாரத்தை அதிக சந்தோஷத்துடனும் திருப்தியுடனும் சாப்பிட வேண்டும். திட்டத்திற்கு மேல் சாப்பிடக் கூடாது. பெருந்தீனியில் ஆசைவைத்து சண்டைபோடக் கூடாது.

15. பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் முகம் கை கால்களை சுத்தம் செய்து கொண்டு வாய் கொப்பளிக்கவேண்டும்.

16. தினசரி தவருமல் பாடங்களை வாசிப்பதுடன் கஷ்டமான வார்த்தைகளை எழுதி வரப் பண்ண வேண்டும்.

17. புத்தகங்களைத் தினந்தோறும் தூசியில்லாமல் தட்டி ஒழுங்காய் வைத்துக்கொள்ள வேண்டும்.

18. எல்லோரிடமும் அதிக மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். பெரியவர்களை "நீ" என்று சொல்லாமல் "நீங்கள்" என்று சொல்லவேண்டும்,

19. விடுமுறை நாட்களில் படிக்கிற நேரங்கள் தவிற இதர நேரங்களில் பெற்ரேர்களுக்கு உதவி புரிய வேண்டும். விபரம் (1) வீட்டிலுள்ள குப்பைகளைப் பொறுக்குதல் (2) ஒட்டடை அடித்தல் (3) சுவரிலும் கதவிலும் கிறுக்கியிருக்கிறதை அழித்தல் (4) மாட்டுக்கு வைக்கோல் போடுதல் (5) செடிக்குத் தண்ணீர் பாய்ச்சுதல் (6) விளக்கு துடைத்தலும் எண்ணெய் விடுதலும்.

20. இரண்டு பிள்ளைகள் சேர்ந்து பேசும்போது உத்தமர்களைப் பற்றியும் மகான்கள் படித்தவர்களைப் பற்றியும் பேசவேண்டும்.

21. பிள்ளைகள் அடிக்கடி தங்களை சீர்திருத்தம் செய்து கொள்ளவேண்டும். அதாவது படித்தவர்களிடமும் பெற்றோர்களிடமும் உபாத்தியாயர்களிடமும் சென்று அவர்களை கேட்டு தங்களிடமுள்ள பிழைகளைத் தெரிந்துகொண்டு ஒவ்வொன்றாய் குறைத்துக் கொண்டு வரவேண்டும்.

22. பிள்ளைகள் எப்பொழுதும் எந்த வேலையையும் செய்வதற்கும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

23. பாடத்தைப்பார்த்து எழுதும்போது அதிக சிரத்தையுடன் முற்றுப்புள்ளி, கமா முதலியவைகளைக் கவனித்து அச்சுப்போல் எழுதப் பழக்கிக்கொள்ளவேண்டும்.

24. பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது நன்றாய்க் கவனித்து முக்கியமானதை உடனுக்குடன் எழுதிக்கொள்ளவேண்டும்.

25. பெற்றோர்களையும் இதரர்களையும் காசு கேட்பது மிகவும் கெட்ட பழக்கம்.

26. இளமை பருவத்திலிருந்தே சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தும், கடவுளுக்குப் பயந்தும் ஒழுங்காய் நடக்கவேண்டும்.

27. சமத்துவமே கடவுள் சிருஷ்டியின் அடிப்படை, மக்கள் இடையில் உயர்வும் இல்லை, தாழ்வும்

இல்லை என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்தல் அவசியம்.

28. தினசரி பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது தேவையான புத்தகங்களை அவ்வன்றைய பாட திட்டப்படி எடுத்துக்கொண்டு போக வேண்டும்.

29. பென்சல், ரப்பர் முதலியவைகளை மறந்து போகாமல் எடுத்துப்போகவேண்டும்.

30. பிள்ளைகள் தங்கள், சொக்காய், வேஷ்டி முதலியவைகளுக்கு வாரத்திற்கு ஒரு தடவை சவுக்காரம் போட்டுத் துவைக்கவேண்டும்.

31. பணக்கணக்குகள் அதிக சந்தோஷத்துடன் போடவேண்டும். சுருக்கு வழியில் போட அப்பியாசித்துக்கொள்ளவேண்டும்.

32. தினசரி ஐந்து புதிய வார்த்தைகள் (புத்தகத்தி லில்லாதது) படித்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவைகளை தங்களுடைய குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டு நன்ருய் வரப்பண்ணவேண்டும்.

33. ஏதாவது பிசகு செய்துவிட்டால் அதற்காக வருத்தப்படவேண்டும். மறுபடி பிசகுகள் ஏற்படாமலிருக்க கடவுளை வேண்டிக் கொள்ளவேண்டும். தன்னைத்தானே தண் டித்துக்கொள்ளும் முறையை அனுஷ்டிக்க லாம். அதாவது பட்டினி கிடக்கலாம். இம் போசிஷன் எழுதலாம்.

34. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நம்பும்படி யாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

35. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய விஷய மாவது கற்றுக்கொள்ள வேண்டும்.

36. பாட சம்பந்தமில்லாத இதர புத்தகங்களையும் தினசரி படிக்க வேண்டும். படித்த விஷயத் தைச் சுருக்கமாய்க் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

87. எல்லோரிடமும் இனிமையாகப் பேசவேண் டும். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயருக்கு எதிரில் போடத்தவறிய கணக்குகளை வீட் டில் நன்றாய் போட்டுப் பழக்கிக்கொள்ள வேண்டும்.

33. பாடம் படிக்கும்போது எந்தெந்த இடத்தில் உபாத்தியாயர் கேள்விகள் கேழ்ப்பார் என் பதைக் கவனித்து நன்றாய்ப் படிக்க வேண் டும்.

39. தினசரி பிள்ளைகள் முக்கிய விஷயங்கள் அடங் கிய டயரி ஒன்று எழுதி வரவேண்டும். அந்த டயரியில் காலையில் இருந்து இரவு படுத்துக் கொள்ளும் வரையில் செய்த முக்கிய வேலை கள் விபரம் தெளிவாய் இருக்கவேண்டும்.

40. பிள்ளைகள் அதிக ஊக்கத்துடனும் விடா முயற்சியுடனும் தங்கள் பாடங்களைப் படிக்க வேண்டும்,

41. பாராமல் வரப்பண்ணவேண்டிய பாடத்தை 5 தடவைகள் பலகையில் எழுத வேண்டு

10 தடவைகள் வாசிக்க வேண்டும். பிறகு புத்தகத்தை மூடிவைத்துவிட்டுப் படித்ததைப் பலகையில் எழுதவேண்டும். பிறகு புத்தகத்தைப் பார்த்து திருத்தவேண்டும். 1. பிசகு வந்தால் 5 தடவை வாசிக்க வேண்டும். 2. பிசகுகளுக்கு 10 தடவைகள் வாசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் படித்த பாடம் மனதில் தங்கும்.

42. இராத்திரி படுத்துக் கொள்வதற்கு முன் எல்லாக் கதவுகளிலும் தாழ்ப்பாள்கள் ஸரிவரப் போடப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சாவிகளை குறிப்பிட்ட இடத்தில் மாட்டிவைக்க வேண்டும். மாட்டுக் கொட்டகையையும் பார்க்க வேண்டும். மாட்டுக்கு வைக்கோல் போடவேண்டும்.

43. செய்தித் தாள்கள் தினசரி தவறாமல் பார்த்து வர வேண்டும், அது தான் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான வழி.

44. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போன பிற்பாடு மணியடிக்கும் வரையில் அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்துகொண்டு பாடத்தைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

45. உபாத்தியாயர் வகுப்பில் நுழையும்போது எழுந்து நின்று மரியாதை செய்யவேண்டும். எல்லோரும் ஏக காலத்தில் அழகாய் நிற்க வேண்டும்.

46. உபாத்தியாயர் கேழ்க்கும் கேள்விகளுக்குத் தகுந்த விடையளித்து அவரை சந்தோஷப் படுத்தவேண்டும்.

47. மாணவன் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றில் கூட தவறக்கூடாது. கடமையில் தவறுபவன் மகா பாபி யென்றும், கடவுள் அவனுக்கு உதவி செய்யமாட்டார் என்பதையும் மனதில் வைத்துக்கொண்டு ஒழுங்காய் நடக்கவேண்டும்.

48. பிள்ளைகள் தங்கள் வகுப்பில் படிக்கும் புத்திசாலிப் பிள்ளைகளுடன் சினேகம் செய்து கொள்ளவேண்டும்.

49. எல்லாப்பிள்ளைகளும் நன்ருய் வாசிக்க வேண்டும். எல்லோரும் ஸௌக்கியமாய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஆரம்பத்திலிருந்தே ஏற்படவேண்டும்.

50. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை பூர்த்தி செய்த பிற்பாடுதான் அடுத்த காரியத்திற்குப் போகவேண்டும்.

51. தினசரி பிள்ளைகள் தலையில் எண்ணெய் தடவிக்கொண்டு தலை சீவிக்கொள்ள வேண்டும்.

52. வாரத்திற்கு ஒரு தடவை தவருமல் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்

53. இரண்டு மாதத்திற்கு ஒரு தடவையாவது பேதிக்குச் சாப்பிடவேண்டும்.

54. ஒவ்வொரு பையனும் ஒரு குட்டை நோட்புக் எப்பொழுதும் சட்டைப்பையில் வைத்திருக்க வேண்டும். அதற்கு புத்திமதி நோட்புக் என்று பெயர் கொடுக்க வேண்டும். யார் என்ன யோஜனை அல்லது புத்தி சொன்னாலும் அதில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் நடத்தல் வேண்டும்.

55. பிள்ளைகள் கேட்டதிற்கு மாத்திரம் பதில் சொல்லவேண்டும். சொல்லும் பதில் சுருக்கமாகவும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

56 தினந்தோறும் காலையிலும் மாலையிலும் தவறாமல் தேகாப்பியாசம் செய்யவேண்டும்.

57. பிரதிதினமும் தோராயமாய் செய்யவேண்டிய வேலையைத் தவிற அதிகப்படி செய்யவேண்டிய வேலைகள் இருந்தால் அவைகளை தனியாக குறித்து வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாய்ச் செய்து முடிக்க வேண்டும்.

58. உள்ளதைக்கொண்டு திருப்தியடைய வேண்டும். அதிக ஆசை கூடாது.

59. ஆரம்பத்திலிருந்தே சிக்கனமாய் செலவு செய்ய பழக்கிக்கொள்ளவேண்டும்.

60. பாடங்களை வாசிக்கும்போது ஒவ்வொரு பாடத்தின் அடியில் இருக்கும் கேள்விகளுக்கு சரியான விடைகள் தெரிந்துகொள்ளவேண்டும். சரியான விடை தெரியா

விட்டால் உபாத்தியாயரைக் கெட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.

61. பிள்ளைகள் எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தாலும் தெய்வத்தை வணங்கிவிட்டு செய்வது நல்லது.

62. வெற்றியோ, அல்லது தோல்வியோ எதிர்பாராமல் செய்யும் காரியங்களை விடா முயற்சியோடும் சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் செய்யவேண்டும்.

63. அதிக தைரியசாலிகளாயிருக்கவேண்டும் நன்குய் யோஜித்த பிறகே எதையும் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

கிராஸ்வேட் பிரஸ், சிதம்பரம்.

MADRAS

Printed at:

**THE CROSSWORD PRESS,**
CHIDAMBARAM. Q. H. SA. 67.